

Vol.27 | No. 12 | December 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





**Diocesan Day Celebration- November 12, 2023 at Padanthalumoodu**






**CML Forane level Rally, Nov 26,2023 at Kattathurai, manjalumoodu, Varuthattu**



Golden Jubilee of SDS Congregation 04.11.2023 at Manjalumoodu



Quiz Competition for Sisters 11.11.2023 at Minor Seminary



Tenkasi Mission Meet - 13.11.2023 At Tenkasi



Missionary Meet 14.11.2023 at Madurai

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 NO : 12 DECEMBER 2023



# இறையருள்
# IRAIARUL

Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

Bishop's Message 02
இரங்கல் செய்தி 10
மறைக்கல்வி 12
மிஷன் லீக் 14
குழந்தை ஈசோ இயக்கம் 16
இளையோர் இயக்கம் (SMYM) 17
இல்வாழ்வு இயக்கம் 19
வின்செென்ட் தே பவுல் சங்கம் 22
கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் 24
நலவாழ்வு பணிக்குழு 26
தக்கலை இளையோர் கல்வி பணியகம் 27
அருட்சகோதரர்களிடமிருந்து 28
மறைமாவட்ட செய்திகள் 30
தென்காசி மறைபரப்புதள செய்திகள் 32
மறைவட்ட செய்திகள் 33
MONTHLY AGENDA - December 2023 37
BISHOP'S ENGAGEMENTS 39

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/152/2023**

**30 November 2023**

**Dear Readers,**

Warm greetings in the spirit of the upcoming Christmas season from Bishop's House, Thuckalay!

As we joyfully anticipate the celebration of the birth of our Lord and Saviour, Jesus Christ, I extend myheartfelt wishes to you.

The liturgical year of our Syro-Malabar Church begins with the period of Annunciation. The four weeks in preparation to the feast of the Nativity of Jesus, celebrated on 25th December constitute this season. We call this period also "25 days Lent". This period of annunciation, in our Church, holds special significance in our faith journey, serving as a time of reflection, prayer, and spiritual preparation. In keeping with our tradition, we embark on a sacred journey of 25 days of fasting leading up to the joyous occasion of Christmas. A question that always rings in our minds is why we undertake fasting.

St John, in his first letter, declares: "If we say that we have no sin, we deceive ourselves, and the truth is not in us. If we say that we have not sinned, we make [God] a liar, and His word is not in us" (1 Jn 1:8-10).

Thus, the Sacred Scriptures declare our guilt to be universal, hence the universal obligation to repentance, which St Peter, in his sermon on Pentecost, declared necessary for the forgiveness of sins (Acts 2:38). Hence, the Church's constant admonition is that all the faithful are required by divine law to do penance. From the fact of sin, we Christians can claim no exception. Similarly, from the obligation to penance, we can seek no exemption.

Forms and seasons of penance vary from time to time and from person to person. But the need for conversion and salvation

is unchanging, as is the necessity that, confessing our sinfulness, we perform, personally and in community, acts of penance in the pledge of our inward penitence and conversion. For these reasons, the people of God, who are at once holy, penitent, and always in the process of renewal, have from the beginning observed seasons and days of penance. They do so by community penitential observances as well as by personal acts of self-denial; they have imitated the example of the spotless Son of God Himself, concerning whom the Sacred Scriptures tell us that He went into the desert to fast and to pray for forty days (Mk 1:13). Thus, Christ gave the example to which St Paul appealed in teaching us how we, too, must come to the mature measures of the fullness of Christ (Eph 4:13).

The spiritual benefits of fasting, though, can be so rich that this practice should be embraced throughout the whole liturgical year. Christian texts, as well as the Old and New Testaments, show fasting was common in the early Christian community. Drawing from the example of Christ and the disciples, early Christians saw fasting as a way to increase closeness with God through denial of self. Fasting breaks the enslavement to material objects (in this case, food) and "helps us acquire mastery over our instincts and freedom of heart," as the Catechism of the Catholic Church stipulates in Article 2043.

"The 25 days fast", which we are about to enter, is a penitential season in which we participate through prayer, fasting, and almsgiving. Just like during Lent and other days of fast, we prepare ourselves through fasting to gird our hearts and souls for the coming of the new-born King.

In a sermon, Pope St Leo the Great shared the necessity of fasting for spiritual growth. Traditionally, fasts were observed at five different times during the year so that they were in sync with the seasons. The liturgical fasts allow the Christian to serve the Creator in union with his creation and to build a consistent pattern of self-restraint. "When the body, therefore, fasts from food, let the mind fast from vices and pass judgment upon all earthly cares and desires according to the law of its King," the pope said.

The Pope also expressed the spiritual duty of fasting in

December. “You must observe the fast, whereby, for the complete harvest of all fruits, there is most fittingly offered to God, the giver of them, an offering of self-mortification,” Pope St Leo said. “For what can be more salutary for us than fasting, by the practice of which we draw near to God and, standing fast against the devil, defeat the vices that lead us astray.” As I said, in our Syro-Malabar Church, 25 days before the celebration of the birth of Jesus Christ are always kept as days of fasting. According to Fr Mathias Mundadan, a Church historian, observing noyambu is one of the finest forms of preparing for Christmas. He explains that noyambu, coming from the Malayalam words novu (pain) and anpu (mercy), designates a period for performing penance and showing Christian charity. Abstinence is a unique way of showing one’s faith.

When speaking of fasting, we need to keep in mind that it is not an external action. It has to come from within, spread to all our actions, and raise us to the heavens. Fasting is not a period of sadness; it is a period of enjoyment. It is a period of enjoying heavenly bliss. It is a period for celebrating the Holy Qurbana and the Liturgy of the Hours in the most solemn manner possible. It is a time to be with God in His temple. In fasting, more than not eating, drinking, or taking part in any bodily entertainment, it is the spiritual entertainment that is more important, namely, the celebration of the liturgies.

If fasting in the Old Testament was a sign of repentance, in the New Testament it is for acquiring divine qualities and is equal to the heavenly life. Fasting is for purifying the heart. It is for humbling ourselves in the presence of God in the heavenly kingdom. We know the parable of the Pharisee and the Tax Collector (Luke 18:9–14). The Pharisee stood by himself and prayed, “God, I thank you that I am not like other people - robbers, evildoers, adulterers - or even like this tax collector. I fast twice a week and give a tenth of all I get.” But the tax collector stood at a distance. He would not even look up to heaven but beat his breast and say, “God, have mercy on me, a sinner.” We know that the tax collector and not the Pharisee, who went home, justified before God.

Let us meaningfully spend the twenty-five days that are at hand

preparing ourselves well to receive the child Jesus. Whenever we think of Christmas, we are reminded of the nativity scene with the stable, the ox, the donkey, the shepherds, Mary and Joseph, and, on Christmas, the image of the Child Jesus. This is an opportunity to reflect on the mystery of God's love for us, which we are celebrating.

Christmas - the birth of God in a poor manger - is the most celebrated feast in this world. Christmas offers us all an opportunity to recapture glimpses of childhood's sacred memories. There is something unique about gazing into the crib and coming face-to-face with the truth that God came down from heaven and dwelt among us as a helpless baby. The gospel story tells us that at Bethlehem on a starry night, the Son of God was born. A burst of light startled the shepherds, and angels sang at his birth. In the simplicity of the stable, amid the lowly animals and the humble shepherds, God reveals His grand plan for salvation. The birth of Jesus is a testament to the God who enters into our human experience and who chooses to dwell among us amid our joys and struggles. It is a divine proclamation that no one is beyond the reach of God's love, no matter how insignificant or broken we may feel.

As we exchange gifts and express our love for one another during this season, let us be mindful that the truest gift is the one we received on that starry night in Bethlehem - a gift wrapped in swaddling clothes and lying in a manger. The gift of Jesus is a beacon of hope in a world often darkened by sin and suffering. It is a light that dispels the shadows of despair and illuminates the path to eternal life. During this season, let us unwrap the gift of love bestowed upon us by God. Let us embrace the message of the Christ-child - a message of peace, goodwill, and reconciliation. In a world hungry for meaning and purpose, the birth of Jesus reminds us that true fulfilment comes from aligning our lives with the will of God

I invite you, dear Fathers, to enter into these important moments - the season of Annunciation and the season of Christmas - of our Christian living with greater commitment and devotion so that we can reap rich spiritual benefits not only for ourselves but also for

the people for whom we have dedicated our lives

My dear fathers, our Holy Father, Pope Francis, has declared 2025 as the Jubilee Year of Our Lord and entrusted the responsibility to the president of the Pontifical Council for the Promotion of the New Evangelization to find suitable ways for the Holy Year to be planned and celebrated with deep faith, lively hope, and active charity. All the dioceses have received instructions from the above dicastery for the active celebration of this Jubilee. The Holy Father has chosen "Pilgrims of Hope" as the motto of the Jubilee. This Jubilee for the year 2025 was discussed in our last presbyteral council, and a four-member committee was constituted, namely, Rev. Fr. Joshy Kulathumkal, Fr. Thomas Sathianesan, Fr. Justin Cheruvelil and Fr. Jimmy Thekkekadumathil, to prepare a two-year programme for our diocese based on the programme envisaged by the dicastery. I believe the committee will present it at our next Priest conference.

Although there will be occasions when we can personally wish one another during this month, still let me, through this letter, wish you, dear Fathers, a Merry Christmas and a God-filled New Year 2024. May you have a faith experience of the Babe of Bethlehem as you prepare to celebrate Christmas! May our Blessed Mother intercede for each one of us!

Yours in Christ Jesus,

✝ George Rajendran SDB

Bishop of Thuckalay

# கூட்டொருங்கியக்க திரு அவையும் மறைப்பணியும்

அண்மையில் நிறைவேறிய உலக ஆயர்கள் மாமன்றத்தின் 16வது பேரவை கூட்டத்தின் முதல் அமர்வில் முன்னிறுத்தப்பட்ட கருப்பொருட்களில் முக்கியமானது திருஅவையின் மறைப்பணியில் உடன்பங்கேற்பின் அவசியம்.

அக்டோபர் மாதம் 28ஆம் தேதி வெளியிடப்பட்ட மாமன்றத்தின் 41 பக்க தொகுப்பு அறிக்கையில் "co-responsibility" என்ற வார்த்தை மட்டும் 16 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியினர், திருத்தொண்டர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரின் சம மாண்பினை உணர்ந்து வாழும் ஒருங்கியக்க பார்வையை இந்த அறிக்கை உணர்த்துகின்றது. நம் அனைவரின் மறைப்பணி முறைகளும் திருஅவைக்கு அவசியம் என்பதை உறுதிப்படுத்தும். அதே வேளையில், இன்றைய திருஅவையின் மறைப்பணிகளுக்கு தேவையான மாற்றங்களையும் நாம் இந்த ஆவணத்தில் காண்கின்றோம். உலக ஆயர்களின் மாமன்றம் குறிப்பிடும் இந்த மாற்றங்களை குறித்து சிந்திப்பது ஏதுவாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

**1. இறைமக்களின் மறைப்பணி :** திருஅவையின் தினசரி வாழ்வியலில் இறைமக்களின் மறைப்பணியின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். மறைமாவட்டங்களின் ஆளுமையில் ஈடுபட்டிருக்கும் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் இதை நாம் சாத்தியமாக்க முடியும். தலத்திருஅவைகளில் இறைமக்களை உள்ளடக்கிய பேரவைகளை கட்டாயமாக்கவும், மறைமாவட்ட மற்றும் தேசிய அளவிலான இயக்கங்களில் இறைமக்களின் பங்கேற்பை உறுதி செய்யவும் திருஅவை சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். திருமுழுக்கின் வழியாக இறைமக்கள் பெற்றுள்ள அருளின் பயனால் அவர்கள் திருஅவையின் எதிர்காலத்தை குறித்த தேர்ந்து தெளியும் பணிக்கு தொண்டாற்ற அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை நாம் உணர வேண்டும். இந்த மாற்றங்களை நோக்கி கவனத்தோடு பயணிக்கும் ஒருங்கியக்க திருஅவை தன்னையே தொடர் பரிசீலனைக்கு உட்படுத்தி சீரான முறையில் இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

**2. ஆயர் மறைப்பணி :** ஒருங்கியக்க திருஅவையில் ஆயர்களின் பணி என்ன என்ற கேள்வி ஆயர்கள் மாமன்றத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. ஆயர்களின் மறைப்பணியும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய மாமன்றம் அதற்கான முறைகளையும் விவரிக்க முடிவு செய்துள்ளது. ஆயர்கள் தங்கள் மறைமாவட்டத்தின் ஆளுமை முறையில், சொத்து நிர்வாகப் பணியில், நிதியின் கையாளுதலில், பங்கேற்பு குழுக்களில் இயக்கத்தை உறுதி செய்வதில், மற்றும் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் முறையில் தெளிவோடும், ஒளிவு மறைவு இன்றியும் செயல்படுவது அவசியம். ஆயர்களின் தேர்வில் தேசிய ஆயர்களின் பேரவையின் பங்கை உறுதிப்படுத்துவதோடு, இறைமக்கள், துறவியர் அனைவரின் கருத்துகளும் கேட்கப்பட வேண்டும். பாலியல் வன்முறையை பொருத்தமட்டில், ஆயரின் தந்தைக்குரிய பங்கை உணர்ந்து அதே வேளையில் சரியாக நீதியை வழங்க உதவி செய்ய திருஅவை சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி உதவிக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஒருங்கியக்க பாதையில் ஆயரின் மறைப்பணி சந்திக்கும் மாற்றங்களை குறித்த நமது ஒன்றிணைந்த சிந்தனை தொடர வேண்டும்.

**3. குருக்கள் :** மாமன்றத்தில் பங்கேற்ற பெண் உறுப்பினர்கள் ஆயர்கள் மற்றும் குருக்களின் பணிக்கு நன்றி செலுத்திய அதே வேளையில், குருத்துவ அதிகார முறையினால் பாதிக்கப்பட்டிருக்கும் பலரது காயங்களை பற்றியும் பேசினர். பெண்களுக்கு போதிய உரிமைகளையும் வாய்ப்புகளையும் கொடுக்க மறுத்து தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வரும் குருக்கள் திருஅவையின் ஒருங்கிணைப்பிற்கு பாதகம் விளைவிக்கின்றனர். இந்த சவாலை எதிர்கொள்ள குருத்துவ உருவாக்க முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். மேய்ப்புப் பணியில் சட்ட திட்டங்களை மட்டுமே மையப்படுத்தும் முறையையும் தங்கள் சித்தாந்தங்களை மற்றவர்களின் மீது திணிக்கும் போக்கையும் மாற்றிக்கொள்ளுதல் அவசியம். குருக்களின் மணவாழ்வை குறித்த சிந்தனை வேண்டும் என்று விவாதிக்கபட்டாலும் மாமன்றத்தின் அதிக எதிர்ப்பு வாக்கை பெற்ற கருப்பொருளும் அதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது.

**4. இருபால் துறவியர் :** துறவற வாழ்வில் பல்வேறு சபைகளின் தனித்துவம் போற்றப்பட வேண்டும். அதே வேளையில் துறவற சபையின் உறுப்பினர்களுக்கிடையே ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலுக்கு தடையாக இருக்கும் அதிகாரத்துவம் மாற வேண்டும். குறிப்பாக பெண் துறவிகளின் சபைகளில் நடக்கும் உரிமை மீறல்கள் சரியான

முறையில் தடுக்கப்பட்டு அவர்களின் மாண்பு நிலைநாட்டப்பட வேண்டும். அதிகாரத்தையும், தனி முன்னேற்றத்தையும் மையப்படுத்தும் ஆளுமைமுறை ஒழிந்து ஒருவரை ஒருவர் மதித்து வாழும் பாங்கு நமது இருபால் துறவியர்களின் மத்தியில் வளர வேண்டும்.

**5. திருத்தொண்டர்கள் :** பெண்கள் திருத்தொண்டர்களாக திருப்பொழிவு செய்யப்பட முடியுமா? என்ற கேள்வியும் மாமன்றத்தில் பெரும் எதிர்ப்பையும் அதே வேளையில் ஆக்கப்பூர்வ கருத்துகளையும் எழுப்பியது. எனினும் இந்த மறைப்பணி இரண்டாம் வத்திகான் சங்கத்திற்கு பிறகு தான் லத்தீன் திருஅவையில் நிலையான மறைப்பணியாக நிலை நிறுத்தப்பட்டது என்பதால் திருத்தொண்டினை குறித்த இறையியலில் பல குழப்பங்கள் இருக்கின்றன. எனவே திருத்தொண்டர்களின் மறைப்பணியை குறித்த தொடர் சிந்தனையும் விவிலிய மற்றும் தொடக்க கால திருஅவையின் வரலாற்றுப் பார்வையில் திருத்தொண்டர்களின் பணியை குறித்த தெளிவும் தேவைப்படுகின்றன என்று மாமன்றத்தின் அறிக்கை விவரிக்கின்றது. மேலே குறிப்பிடப்பட்ட கருப்பொருட்கள், தேவைகள் மற்றும் சிக்கல்கள் நமது கூட்டொருங்கியக்க திருஅவையின் பாதையில் தொடர்ந்து சிந்தனையையும், விவாதங்களையும் ஊக்குவிக்க வேண்டும். அக்டோபர் 2024–இல் நடைபெறவுள்ள ஆயர்கள் மாமன்றத்தின் இரண்டாவது அமர்வில் இந்த சிந்தனைகள் முக்கியத்துவம் பெறும். மூன்றாம் ஆயிரமாண்டின் திருஅவைக்கு கூட்டொருங்கியக்க பாதை எந்த வகையான பங்கேற்பு நிர்வாகத்தை சாத்தியமாக்க முடியும் என்பதை தீர்மானிக்கப் போவது நமது ஒருங்கிணைந்த சிந்தனையின் செயல்முறையும் கலந்துரையாடலும் தான். இந்த சிந்தனைக்கும் கலந்துரையாடலுக்கும் உண்மையுள்ள ஆக்கப்பூர்வமான விதத்தில் பங்களிப்போம். காலத்தின் தேவைகளுக்கும், இறைவெளிப்பாட்டின் உண்மைக்கும் உண்மையுள்ளவர்களாகவும், நமது திருச்சபையின் மேய்ப்புப் பணியின் சவால்களுக்கு உணர்திறன் உடையவர்களாகவும் இருப்போம். பெந்தெகொஸ்தே பெருவிழாவின் நாளின் மேல் மாடி அறையில் திருத்தூதர்களோடு இணைந்து செபித்த கடவுளின் தாயான அன்னை மரியாள் நமது ஒருங்கியக்க பயணத்தில் நம்மோடு உடனிருக்கின்றார்.

**George Cardinal Alencherry**
**Major Archbishop**
**Syro - Malabar Church**

Prot. No. 1085/2023 25.10.2023

## இரங்கல் செய்தி

மதிப்பிற்குரிய அருட்பணியாளர் தாமஸ் முட்டத்து குன்னேல் இறைவனடி சேர்ந்த தகவலை அறிந்து கொண்டேன். அருட்தந்தை அவர்கள் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் உள்ளார் என்னும் செய்தியினை முன்னரே அறிந்திருந்தாலும் அவர் இறந்தார் என்ற செய்தி அனைவரையும்குறிப்பாகஎன்னையும்மிகுந்தவருத்தத்துக்குள்ளாக்கியது.

முதலாவதாக எனக்கு அருட்தந்தை அவர்கள் மேல் உள்ள மதிப்பையும், மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறேன். அருட்தந்தை அவர்கள் தன் முழுவதையும் கன்னியாகுமரி திருத்தொண்டு தளத்திலும், தக்கலை மறை மாவட்டத்திலும் ஆற்றினார்கள். முத்திப்பேறு பெற்ற மேதகு ஆயர் மேத்யூ காவுகாட் அவர்களின் சொல்லிற்கிணங்கவே அருட்தந்தை அவர்கள் தன் இறைவாழ்வு முழுவதையும் கன்னியாகுமரி இறைமக்களுக்காக பணிசெய்து வாழ்ந்தார். தக்கலை மறைமாவட்டத்தின் முதல் குருகுல முதல்வராக தேர்வு செய்யப்பட்டார். அக்காலத்தில் ஆயராக இருந்த எனக்கு அனைத்து பணிகளிலும் உறுதுணையாய் இருந்தார். தனக்கு தெரிந்த தமிழ்மொழியில் மக்களோடு உறவாடி மகிழ்ந்தார். இறைமக்கள் அவரை “பெரிய சாமி” என அன்போடு அழைத்தனர். எல்லா இடங்களிலும் உள்ள இறைமக்களைச் சந்தித்து அவர்களுக்கு தேவையான ஆன்மீக உதவிகள் புரிந்தார். எப்பொழுதும் உற்சாகத்தோடு செயல்பட்டார். யார் என்ன உதவி கேட்டாலும் உடனே செய்து கொடுப்பார். எனவே மக்கள் அவரை மிகுதியாய் அன்பு செய்தனர். அவரும் மக்களை அன்பு செய்தார். இளைஞர்களின் வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து அவர்களின் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்தார். நோயாளிகள், ஏழைகள், முதியோர்கள் ஆகியோர்கள் மீது மிகுந்த இரக்கம் கொண்டிருந்தார். அவருடன் பணியாற்றும் அனைத்து அருட்பணியாளர்களும் அவர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள். மேலும் துறவற அருட் சகோதர, சகோதரிகளுக்கு தலைமைப் பண்போடு அவர்களுடன் இணைந்து அருட்பணி ஆற்றியது என் மனதில் நினைவலையாக வருகிறது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வராக 7–வருடங்கள் பணியாற்றினார். தன் பணி நிறைவு பெற்று சங்ஙனாச்சேரி மறை மாநில

அருட்பணியாளர்களின் முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வந்தார்கள். திருச்சபையின் மறைப்பரப்புப் பணியில் இணைந்து பயணிக்கும் தன்மை இருக்க வேண்டும் என்று ஆயர் பேரவை வழியாக திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் அறிவிக்கும் இத்தருணத்தில் நம் அருட்தந்தை இந்தப்பணியை அன்றைய காலகட்டத்திலேயே, இதே நோக்கத்துடன் சிறப்பாக செய்தார்கள் என்று கூற நான் விரும்புகிறேன். அதிகார மனப்பான்மை இல்லாமல் அனைவரோடும் இணைந்து மறைப்பரப்பு பணியை செய்து வந்தவர்தான் நம் அருட்தந்தை,.

புனித பவுலடியாளர்களைப் போன்று கன்னியாகுமரியின் மக்களை மீட்பதற்காக அவர்களோடு இணைந்து அவர்களுக்கு எல்லாமானார். தக்கலை மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பொதுநிலையினர், அருட்பணியாளர்கள், துறவற சகோதர சகோதரிகளின் மனதில் என்றும் நிலைபெற்று வாழ்பவர்தான் அருட்தந்தை. தாமஸ் முட்டத்து குன்னேல். இத்தகைய பணியை செய்த நிறைவுகளுடன் அவர் கடவுளின் முன்னிலையில் நிற்கின்றார். ரோமில் நடைபெறும் ஆயர் பேரவையின் இறுதி பகுதியின் முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டிய தருணத்தில் இங்கிருந்து என்னால் வர இயலாத நிலையில் உள்ளேன். அருட்தந்தையின் இறுதி சடங்கில் சங்ஙனாச்சேரி, காஞ்சிரப்பள்ளி மறைமாவட்ட ஆயர்களும், தக்கலை மறை மாவட்ட ஆயர் மேதகு. ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் பங்கு பெறுவார்கள். அவர்களோடும் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அருட்சகோதரர்கள், சகோதரிகள் குறிப்பாக தக்கலை மறைமாவட்ட இறைமக்கள் நம் அருட்தந்தையின் உறவினர்கள் அனைவரோடும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். “தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை; செவிக்கு எட்டவில்லை; மனித உள்ளமும் அதை அறியவில்லை.”(1கொரி 2:9) என்ற திருவசனம் நமக்கு ஆறுதல் அளிப்பதாக; கடவுள் தம் அருட்தந்தைக்கு நித்திய இளைப்பாற்றி அளிப்பாராக.




✠ *ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி*



*சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர்*




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" [மாற்கு 16:15]***

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

**மறைவட்ட விவிலியக் கலைவிழா - எழுத்துப்போட்டிகள்**

2023 – 2024 ஆம் ஆண்டு மறைமாவட்ட விவிலியக் கலைவிழா எழுத்துப்போட்டிகள் 2023 நவம்பர் 05 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை படந்தாலுமூடு, திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்டது. சப்-ஜுனியர் பிரிவு மாணவர்களுக்கு Colouring ஜுனியர், சீனியர் சூப்பர் சீனியர் பிரிவு மாணவர்களுக்கு Pencil Drawing, Senior & Super Senior மாணவர்களுக்கு Essay writing, Poetry writing போட்டியும் நடைபெற்றது மறைவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர். போட்டிகளில் 7 மறைவட்டங்களிலுமாக 175 மாணவர்கள் கலந்து கொண்டனர்.



**ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்**

மறைக்கல்வியின் மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்களின் கூட்டம் 2023 நவம்பர் 25 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட

குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து ஊக்குவிப்பாளர்கள் அவர்கள் பார்வையிட்ட மறைக்கல்வி நிலையங்களின் நிறை குறைகளைப் பற்றி எடுத்துக்கூறினார்கள். பேரருட்தந்தை. தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் திருப்பலிக்கு முக்கியத்துவம் கொடுக்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் மறைக்கல்வி நிலையங்களில் வராத மாணவர்களின் வீடுகளை ஆசிரியர்கள் சந்தித்து மாணவர்கள் வகுப்புகளுக்கு வர முயற்சி எடுக்க வேண்டும் என்றும் மறைக்கல்வி நிலையங்களை சந்தித்த பொதுவான அறிக்கையை இயக்குநர் அருட்தந்தையிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறினார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்கள் ஊக்குவிப்பாளர்களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கினார். தொடர்ந்து மறைக்கல்வி நிலையங்களைப்பற்றி மதிப்பீடு நடைபெற்றது. ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் அறிக்கை சமர்ப்பித்தார்கள். மேலும் 2 -ஆம் பருவ பார்வையிட வேண்டிய மதிப்பெண் படிவங்கள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது அனைத்து ஊக்குவிப்பாளர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். பின் செபத்துடன் கூட்டமானது மாலை 5.00 மணியளவில் நிறைவுபெற்றது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.



***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குநர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குநர்***

# மிஷன் லீக் இயக்கம்

சிறுமலர் MISSION LEAGUE

19.11.2023 அன்று மாலை 3 மணிக்கு மிஷன்லீக் இயக்க மறைமாவட்ட செயற்குழு கூட்டம் இயக்குனர் தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. தொடக்க ஜெபத்தை துணை இயக்குனர் அருள் சகோதரி ஆன்கிரேஸ் அவர்கள் சொல்ல கூட்டம் ஆரம்பித்தது. அன்றைய கூட்டத்தில் மறை மாவட்ட அளவில் நடைபெற்று வந்த நமது விசுவாச நடை பயணம் தற்போது நடைபெறும் முறை குறித்து பேசப்பட்டது. தற்போது மூன்று மறை வட்டங்களிலாக ஏழு மறை வட்ட நடைபயணமும் 26.11.2023 அன்று நடைபெறும் என்றும் இந்நிகழ்வின் வெற்றிக்காக நமது செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பிக்க வேண்டும் என்றும் தந்தை அவர்கள் எடுத்து கூறினார்கள். இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவடைந்தது.

**தக்கலை - பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்டங்கள்**

26.11.2023 அன்று கல்லுவிளை மறைக்கல்வி நிலைய வளாகத்தில் நடை பயணம் ஆரம்பித்து காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் நடை பயணம் நிறைவடைந்தது. பேரருள்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் கொடியசைத்து ஜெபித்து துவக்கிவைத்தார். பின் சுமார் 4 மணியளவில் நடைபயணம் காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் நிறைவடைந்தது. நிறைவு விழாவில் மறைக்கல்வி இயக்குனர் தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்க பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் மற்றும் தேசிய அமைப்பாளர் திரு. ஞானதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். பின் மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் அருட்தந்தை ஜார்ஜ் அவர்கள் நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது. இறுதியாக மாணவ மாணவிகள் மற்றும் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

**நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்கள்**

வயலங்கரை புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து சுமார் 2:30 மணிக்கு நடைபயணம் ஆரம்பித்து வாறுதட்டு புனித சவேரியார் ஆலயத்தில் விசுவாச நடை பயணம் நான்கு மணி அளவில் நிறைவுற்றது. மிஷன்லீக் சர்வதேச துணைத்தலைவர் அருட்சகோதரி ஆன்கிரேஸ் அவர்கள் ஜெபித்து கொடியசைத்து நடைபயணத்தை துவக்கி வைத்தார்கள். பின் நடை பயணம் வீர முழக்கங்களோடு தொடர 4 மணிக்கு புனித சவேரியார் ஆலயம் வந்தடைந்தது. பேரருள்தந்தை சத்யநேசன் அவர்கள் அனைவரையும்

வரவேற்று வாழ்த்துரை வழங்க, பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மறைவட்டத்திற்குட்பட்ட எல்லா பங்குகளில் இருந்தும் அருட் சகோதரிகள் அருட்தந்தையர்கள் மற்றும் அனைவரும் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுடன் இணைந்து சிறப்பித்தனர். இறுதியாக அனைவருக்கும் இனிய தேநீர் விருந்து பரிமாறப்பட்டது. அனைவரும் உண்டு மகிழ்ந்தனர்.

**மஞ்சாலுமூடு, ஆறுகாணி மற்றும் களியல் மறைவட்டங்கள்**

மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்திலிருந்து மதியம் 2.00 மணிக்கு விசுவாச நடைபயணம் புறப்பட்டது. பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் ஜெபித்து கொடியசைத்து விசுவாச நடை பயணத்தை துவக்கி வைத்தார்கள். மாலை 4 மணியளவில் மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா ஆலயத்தில் நடைபயணம் நிறைவுபெற்றது. பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் அனைவரையும் வரவேற்று வாழ்த்துரை வழங்க, தேசிய துணை தலைவி திருமதி. லதா குமாரி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.



எல்லா மறைவட்டங்களில் உள்ள எல்லா அருட்தந்தையர்களும் அருட் சகோதரிகளும், ஆசிரியர்களும் பெற்றோர்கள் மற்றும் பக்த இயக்கங்கள் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் கலந்து மாணவர்களோடு இணைந்து விசுவாச நடை பயணத்தில் கலந்துகொண்டு விசுவாச நடை பயணத்தை சிறப்பித்தனர்.

***அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்***
***இயக்குநர்***

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது. மத்தேயு-19:14***

புனிதர்களின் விழாவினை கொண்டாடும் விதமாக நமது குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகள் இணைந்து புனிதர்களின் படங்களைச் சேகரித்து படத்தொகுப்பு தயாரித்தனர். குழந்தைகளுக்கான சிறப்பு தியானத்தில் அனைத்து குழந்தைகளையும் பங்கெடுக்க வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. கலைவிழாவுக்கான சிறப்பு தகவல்கள் அனைத்து பங்குகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

***அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்***
***இயக்குநர்***

## சீனாய் இறையியல் மையம்

**கல்லுவிளை, சீனாய் இறையியல் மையத்தின் 2- ஆம் பருவ பட்டமளிப்பு விழா 2023 நவம்பர் 12 மறைமாவட்ட தினம் அன்று படந்தாலுமூடு ஆலய வளாகத்தில் நடைபெற்றது.**



# சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

**நடுவண் செயற்குழு கூட்டம்**

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் மறைமாவட்ட நடுவன் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் 2023 நவம்பர் 5 அன்று மதியம் 2.00 மணியளவில் தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது மறைமாவட்ட நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

- இந்த வருட கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் டிசம்பர் மாதம் 10 ஆம் தேதி காட்டாத்துறை அல்லது சூசைபுரம் ஆலயத்தில் நடத்தலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.
- குறும்பட போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியான அனைத்து படங்களுக்கும் ஆறுதல் பரிசு வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.
- அலகு சந்திப்பு நிகழ்ச்சிகள் உடனடியாக தொடங்க வேண்டும் என்றும் மறைவட்ட இயக்குனர் தந்தையோடு ஆலோசித்து மறைவட்ட பொறுப்பாளர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது
- சமூக வலைதளங்களில் இளையோர் இயக்கத்தின் நிகழ்வுகள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- தினந்தோறும் புதுப்புது கருத்துக்களை பதிவேற்ற செய்ய வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.
- DOCAT மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்றும், எல்லா சனிக்கிழமைகளிலும் வீடியோ வெளியிட வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

மாலை 4.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

**கிறிஸ்துமஸ் கொண்டாட்ட தயாரிப்பு கூட்டம்**

கிறிஸ்துமஸ் கொண்டாட்ட தயாரிப்பின் முதல் கூட்டமானது, 2023 நவம்பர் 11 அன்று காலை 10 மணியளவில் சூசைபுரம் மறைவட்ட முதன்மை பணியாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில்

நடைபெற்றது. சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு அவர்கள் முன்னிலை வகித்தார். தூய ஆவி பாடலுடன் கூட்டம் ஆரம்பமானது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் Rejoice 23 என்ற பெயரில் கொண்டாடலாம் எனவும், இளையோர்களுக்கான பொறுப்புகளும் பிரித்து வழங்கப்பட்டது. அருட்தந்தையின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவு பெற்றது. அருட்சகோதரி டீனா SABS, அருட்தந்தை ஜோஸ்மோன் மற்றும் சூசைபுரம் மறைவட்டத்தைச் சார்ந்த அலகு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**அலகு சந்திப்பு**

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்களவில் நடைபெறும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் அந்தந்த பங்குகளில் திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நடைபெற்று வருகிறது. 05.11.2023 அன்று மாங்கரை ஆலயத்திலும், 12.11.2023 அன்று பிலாங்கரை ஆலயத்திலும், 19.11.2023 அன்று களியல், முக்கூட்டுகல், மற்றும் தக்காளிவிளை ஆலயத்திலும் நடைபெற்றது.



***இவண்***
***அகில், செயலர்***




## மாதர் ஜோதிஸ் இயக்கம்

மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட பெறுப்பாளருக்கள் கூட்டமானது நவம்பர் 1 ம் தேதி புதன்கிழமை காலை 11 மணியளவில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் கலந்து கொண்டு சில கருத்துக்களை முன்வைத்தார். மேலும் நவம்பர் 5 ம் தேதி ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் Smart Christmas Savings Scheme மற்றும் வருகின்ற நிகழ்வுகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டமானது சுமார் 1 மணியளவில் இறுதி ஜெபத்துடன் நிறைவுற்றது. இக்கூட்டத்தில் இல்வாழ்வு இயக்க உதவி இயக்குநர், மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட தலைவர் மற்றும் மறைவட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.



## மாதர் ஜோதிஸ் ஊக்குவிப்பாளர்கள் கூட்டம்

மாதர் ஜோதிஸ் ஊக்குவிப்பாளர்கள், தலைவர் மற்றும் மறைவட்ட பெறுப்பாளர்களின் கூட்டமானது நவம்பர் 5 ம் தேதி பிற்பகல் 2:15 மணியளவில் கல்லுவிளை KKSSS அரங்கத்தில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. கூட்டத்திற்கு இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் தலைமை தாங்கினர். அருட்சகோதரி றோஸ் சீரியன்கண்டத் CHF அவர்கள் முன்னிலை வகித்தார்.

சூசைபுரம் பங்கை சார்ந்த திருமதி ஜெசி மேரி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மறைமாவட்ட செயலர் திருமதி பென்சி ராஜகுமார் அவர்கள் கடந்த 4 மாதங்களாக நடைபெற்ற மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் செயல்பாடுகளை அறிக்கையாக வாசித்தார்கள். தொடர்ந்து இயக்குநர் தந்தை தலைமையுரை வழங்கினர். பெண்கள் தான் குடும்பத்தின் ஒளி, ஒளியானது பிறருக்கு வேண்டி ஒளி கொடுப்பது போல தாய்மார்கள் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு ஒளியாக திகழ வேண்டும்.மேலும் தாய்மார்கள் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு ஜெபம் மற்றும் திருவிவிலிய பகுதிகளை படிக்க வைத்து வளர்த்த வேண்டும் என சில கருத்துக்களை கூறினார். மாதர் ஜோதிஸ் தலைவர் திருமதி ஜீலியட் சுனில்



அவர்கள் ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளருடன் கலந்தாலோசித்து; பெறுப்பாளருடன் இணைந்து கிறிஸ்துமஸ் விழா மற்றும் போட்டிகள் நடத்துவது குறித்து பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. நித்திரவிளை மறைவட்ட மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் தலைவர் திருமதி சினேநேலதா அவர்களின் நன்றியுரைக்குப்பின் சுமார் 4:15 மணியளவில் மாதர் ஜோதிஸ் கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. கூட்டதில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஜெபமாலை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 80 பேர் கலந்து கொண்டனர்.

**நவம்பர் 5 ம் தேதி நடைபெற்ற மாதர் ஜோதிஸ் கூட்டத்தின் போது எடுத்த தீர்மானங்கள்**

- டிசம்பர் 16 ம் தேதி உணவு திருவிழா, மற்றும் கரோல் குழு பாடல் போட்டி நடத்த தீர்மானிக்கப்பட்டது.
- மேலும் அன்றைய தினம் Smart christmas பணம் வழங்குதல் மற்றும் கிறிஸ்துமஸ் விழா நடத்த தீர்மானிக்கப்பட்டது.

- டிசம்பர் 16 ம் தேதி நடைபெறவுள்ள அனைத்து மறைமாவட்ட நிகழ்வுகளும் காட்டாத்துறை புனித மிக்கேல் ஆலய வளாகத்தில் வைத்து காலை 10 மணி அளவில் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
- Smart Christmas திட்டத்தில் இணைந்து பணம் செலுத்தி முடித்தவர்களுக்கு 5000 ரூபாய் மற்றும் ஒரு Gift வழங்கப்படும் என இயக்குநர் தந்தை அறிவித்தார்கள்.
- பங்கு அளவிலான ஒரு வருட அறிக்கை மற்றும் Task யை டிசம்பர் 16 ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.
- இனி வரும் அனைத்து நிகழ்வுகளையும் அந்தந்த மறைவட்ட இயக்குநருடன் ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து ஆலோசித்து செயல்பட வேண்டும் என்று இயக்குநர் தந்தை அறிவித்தார்கள்.

**திருமண ஆயத்தப் பயிற்சி**

திருமணத்திற்கு தயாராகும் இளையோர்களுக்கான திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது நவம்பர் 10 மற்றும் 11 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பின் முதல் நாள் காலை 11 மணியளவில் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சுமார் 30 நிமிடம் சிறப்பு வகுப்பு நடத்தினார்கள். இப்பயிற்சி வகுப்பில் 27 இளையோர்கள் கலந்து கொண்டனர்.



***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்- தே-பவுல் சபை

## சூசைபுரம் வட்டார சபை ஆண்டு விழா

5.11.2023 அன்று சூசைபுரம் வட்டார சபையின் ஆண்டு விழா தக்கலை மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் பேருள்தந்தை தோமஸ் பவத்து பறம்பில் அடிகளார் தலைமையில் சூசைபுரம் மறைவட்ட ஆன்மீக ஆலோசகர் பேருள்தந்தை ஆன்றணி ஜோஸ் அடிகளார், மத்திய சபை தலைவர் சகோ. றாபி மற்றும் சூசைபுரம் மறைவட்ட அருட்தந்தையர்கள் முன்னிலையில் சிறப்புடன் நடைபெற்றது. சூசைபுரம் வட்டார சபைக்கு உட்பட்ட 150 க்கும் மேற்பட்ட வின்செந்தியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மேலும் மத்தியசபை பொறுப்பாளர்களும் வட்டார சபை தலைவர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு நிகழ்வாக அனைத்து கிளைச்சபைகள் சார்பாக 30 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மருத்துவ மற்றும் கல்வி உதவி வழங்கப்பட்டது. சூசைபுரம் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேருள்தந்தை ஆன்றணி ஜோஸ் அடிகளார் தலைமையில் நற்கருணை ஆராதனை இடம் பெற்றிருந்தது. சூசைபுரம் வட்டார சபையின் புதிய தலைவராக சகோ. ஜாண் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டார்கள். வட்டார சபை தலைவருக்கும் உடன் பணிபுரியும் வட்டார சபை செயற்குழு உறுப்பினர்களுக்கும் ஆன்மீக ஆலோசகர் தந்தை அவர்கள் ஆசி வழங்கி தொடர்ந்து உறுதிமொழி ஏற்று பதவி ஏற்பு கொண்டாட்டம் நடைபெற்றது. திரு. சௌந்தர்ராஜ் அவர்களின் நினைவலைகள் அடங்கிய புத்தகமானது சூசைபுரம் கிளைச்சபை தலைவரும் புத்தகத்தின் தொகுப்பு ஆசிரியருமான சகோ.ராபின் ஜோசப் அவர்களால் தொகுக்கப்பட்டு சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் பிரதிகள் வழங்கப்பட்டது.



**மருத்துவ உதவி**



மஞ்சாலுமூடு கிளைச்சபை சார்பாக கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்த, வெட்டுமணி பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வரும் பெண்மணி ஒருவருக்கு மருத்துவ உதவியாக ரூ.6000/- மஞ்சாலுமூடு புனித வின்சென்ட் தே பவுல் கிளைச்சபை சார்பாக பொருளர் சகோ.C.விஜயராஜன் அவர்கள் பண பிரிவு நடத்தி துணைத் தலைவர் சகோ.K.சுரேஷ்குமார் அவர்களால் வழங்கப்பட்டது.

**கல்வி உதவித்தொகை**

மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் செயல்படும் கிளைச் சபைகள் (St. James & St.Alphonsa conferences) சிறு சேமிப்பு திட்டம் (KKSSS) வாயிலாக ஐந்து பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக Rs.250000/- (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) வழங்கியுள்ளார்கள். கடந்த 6.5 வருடங்களாக (78 மாதங்கள்) மாதம் தோறும் பயனாளிகளின் பங்களிப்புடன் Rs.500 சேமிப்புதொகையாக செலுத்தி இறுதியில் பயனாளிக்கு Rs.50000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது. சிறு சேமிப்பு திட்டத்தை சிறப்புற வழிநடத்திய கிளைச்சபை தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சகோ. லாரன்ஸ் மற்றும் உதவித் தொகையை மாணவர்களுக்கு வழங்கிய ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை டோஜி செபாஸ்டின் அவர்களுக்கும் மத்திய சபை சார்பாக மனமார்ந்த நன்றிகள்.



***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

**பள்ளி மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி**

குழந்தைகளின் ஓவியத்திறமையை வெளிக்கொணர குழந்தைகள் தினத்தையொட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் மாவட்ட அளவிலான ஓவிய போட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி நடைபெற்றது. "வர்ணம் 2023" நவம்பர் மாதம் 10- ம் தேதியன்று கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் நடைபெற்றது.

தொடக்க விழா KKSSS தலைவர் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. KKSSS-ன் இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் சிறப்புரையாற்றினார். IV முதல் VI வகுப்பு வரை 'குழந்தைகள் தினம்' என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டியும், VIII முதல் X வரை சுவரொட்டி வடிவமைத்தல் போட்டியும் நடைபெற்றது இரு பிரிவுகளில் நடைபெற்றப்போட்டியில் 30 பள்ளிகளை சேர்ந்த 725 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். மாணவர்களுக்கு "போதையை விழிப்புணர்வு"; மைய சிந்தனையில் அருட்தந்தை ஜோமி அவர்களால் மேஜிக் ஷோ கலைநிகழ்வு ஒருமணி நேரம் நடைபெற்றது. தொடர்ந்து போட்டி நிறைவு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தக்கலை மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை.



ஜோஷி குளத்துங்கல் அவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார். ஓவியம் வரைதல் போட்டியில், வர்ணம் தீட்டுதல் போட்டியில் முளகுமூடு, புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி முதல் இடத்தையும் பெற்றனர். இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில், துணை இயக்குநர் தந்தை அஜின் C மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் ஏன ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தினர் இணைந்து செயல்படுத்தினர்.

**நலமாய் வாழ**

உடல் நலம் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் 'நலமாய் வாழ' எனும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சி *21.11.2023* அன்று மாலைக்கோடு திருச்சிலுவை ஆலய அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மார்த்தாண்டம், இயற்கை மருத்துவ மருத்துவர்கள் மரு.ஷீபா மற்றும் மரு.ஷீலா பங்கேற்று பல்வேறு உடல்நலன் ஆலோசனைகளை வழங்கினார்கள். KKSSS திட்டங்கள் மற்றும் கடன் உதவி பற்றி களப்பணியாளர் தலைமையில் விவாதிக்கப்பட்டது. இதில் மாலைக்கோடு சுய உதவிக்குழு உறுப்பினர்கள் *60* பேர் பங்கேற்றனர்.

**அரசின் நலத்திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி**

அரசின் திட்டங்களை மக்கள் தெரிந்து தொழில் இலக்குகளை முன்னேற்றுவதற்கு தேவையான திறன்கள் மற்றும் அறிவைப் பெற கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் அஞ்சுகிராமம்; சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு *15.11.2023* அன்று அழகப்பபுரத்தில் வைத்து அரசின் நலத்திட்டம் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. பயிற்சியாளர் திரு.சுஜித் அவர்கள் நிகழ்வை வழிநடத்தினார்கள்.அப்போது பேசும் போது வேகமாக மாறிவரும் இன்றைய உலகில், நீங்கள் தேர்ந்தெடுத்த துறையில் மதிப்புமிக்கவராக இருக்க அதிக திறன்களையும் அறிவையும் மேம்படுத்துவது மிக முக்கியம் அதற்கான கடனுதவி தொடர்பான சந்தேகங்களுக்கு எப்போதும் தொடர்பு கொள்ளலாம் என கூறினார்கள். இதில் *32* நபர்கள் கலந்து கொணடனர்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

**பள்ளி மாணவர்களுக்கான கருத்தரங்குகள்**

குளச்சல், கார்மல் ஜோதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் வைத்து 'இதயம் காப்போம்' தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் நிகழ்வை தொடங்கி வைத்து துவக்கவுரை வழங்கினார்கள். பிரபல சமூக சேவகர் டாக்டர் எஸ். ஸ்ரீராம் கேன்சர் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் செந்தில் குமார் MBA Phd ஆகியோர் இதயத்தின் செயல்பாடுகள், அறிகுறிகள் மற்றும் இதய நோயை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து கலந்துரையாடினார்கள், மாணவர்களுக்கு சத்தான உணவு உண்பதின் அவசியம் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். சுமார் 800 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.




2023 நவம்பர் 27 அன்று கம்பம், ஆங்கூர்பாளயத்தில் இலவச பொது மருத்துவமுகாம் நடைபெற்றது. சுமார் 150 பொதுமக்கள் இதனால் பயனடைந்தனர்.

***அருட்சகோதரி. டயானா SDS***
***செயலர்***

# தக்கலை இளையோர் கல்வி பணியகம்
## Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

**மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி**

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் 6ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30முதல் 9.30 மணி வரை மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. வகுப்பானது தக்கலை இளையோர் கல்வி சேவையின் பொறுப்பாளர் ஜெஷிலா மேரி அவர்களால் நடத்தப்பட்டது. இவ்வகுப்பானது மாணவர்கள் இன்றைய காலத்தில் எவ்வாறு ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டுமென்றும், ஜெபம் மற்றும் விடாமுயற்சியால் கிடைக்கும் பலன்கள், இலக்கு நிர்ணயித்தல் மற்றும் சுய மதிப்பீடு போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் பயிற்சி வகுப்பானது நல்ல முறையில் நடத்தப்பட்டது. இதில் 15க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குகொண்டனர். மாணவர்கள் மத்தியில் இவ்வகுப்பானது பல மாற்றங்களை ஏற்படுத்தும் வண்ணம் மிகச்சிறந்த முறையில் அமைந்திருந்தது. இவ்வாறாக தக்கலை கல்வி சேவை பணியகம் இயக்குநர் தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது

***ஜெசிலா மேரி,***
***ஒருங்கிணைப்பாளர்***

| BIRTHDAY OF REV. FATHERS DECEMBER - 2023 | |
|---|---|
| Fr. Jose Kanachikuzhiyil | 03 |
| Fr. Alex Puthettu | 16 |
| Fr. Joseph Anithottam CMI | 18 |
| Fr. Antony Jose | 18 |
| Fr. Matheus Robert | 26 |

# அருட்சகோதரர்களிடமிருந்து

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். தங்களது இரண்டாம் பருவத்தை நன்முறையில் துவங்கி செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். திருதொண்டர்கள் மூவரும் தங்களது குருத்துவ கல்லூரிகளில் உள்ள பயிற்சியை முடித்து விட்டு திருத்தொண்டு பணிக்காக மறைமாவட்டதிற்கு வந்துள்ளனர். திருத்தொண்டர் அமண்டோ தனது திருத்தொண்டு பணியை வயலிங்கரை புனித அந்தோனியார் பங்கிலும், திருத்தொண்டர் லின்டோ தனது திருத்தொண்டு பணியை இளங்குருமடத்திலும் துவங்கி உள்ளனர். அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த ஜெபங்களும் வாழ்த்துகளும். புனித தோமையார் உயர் குருத்துவகல்லூரியில் திருத்தொண்டர்களுக்கு நவம்பர் மாதம் 3 ஆம் நாள் பிரியா விடை வழங்கபட்டது. புனித தோமையார் உயர் குருத்துவ கல்லூரியிலும் புனித யோசேப்பு உயர் குருத்துவ கல்லூரியிலும் உஜ்ஜைன் றூகாலயா உயர் குருத்துவ கல்லூரியிலும் நவம்பர் மாதத்தில் குடும்ப விழா நன்முறையில் கொண்டாடப்பட்டது. எங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. தொடர்ந்தும் புனிதமான குருவானவர்களாக மாற எங்களுக்காக வேண்டுங்கள். நன்றி

***சகோ. சுனில் ஆன்றணி***

---

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| மறைமாவட்ட தியானம் | – டிசம்பர் 01-03 |
| அருட்தந்தை தோமஸ் தெக்கேல் நினைவு | – டிசம்பர் 14 |
| CRI கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் | – டிசம்பர் 16 |
| அருட்தந்தையர் கூட்டம், கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் | – டிசம்பர் 28 |

## புனித மரியன்னை இளங்குருமடம் - முக்கூட்டுக்கல்

இளம் குரு மடத்தின் வெள்ளி விழாவையொட்டி அருட்கன்னியர்களுக்கான வினாடி வினா போட்டி 2023 நவம்பர் 11 அன்று மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது. இப்போட்டியில் CMC அருட்கன்னியர்கள் முதல் பரிசும், FCC அருட்கன்னியர்கள் இரண்டாம் பரிசும், SDS அருட்கன்னியர்கள் மூன்றாம் பரிசும் பெற்றனர். இவ்விழாவிற்கு பேருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

நவம்பர் 14 அன்று புனித மரியன்னை இளங்குருமடத்தின் இரண்டாம் பருவ அருள் தந்தையர்கள் திருப்பலி நிறைவேற்றி அருள் சகோதரர்களுடன் அன்றைய நாளை செலவழித்தனர்.

முக்கூட்டுகல் புனித மரியன்னை இளம் குரு மடத்தில் 2010 முதல் 2013 வரை இயக்குனராக இருந்த அருள்தந்தை ஜேம்ஸ் அவர்கள் நவம்பர் 28 அன்று வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி அருள் சகோதரர்களிடம் உரையாடினார்.



| FEASTDAYS OF REV. FATHERS - DECEMBER 2023 | |
|---|---|
| Fr. John Joseph | 27 |
| Fr. John Thekkel | 27 |
| Fr. Joshy Kulathumkal | 27 |
| Fr. Subin Scaria Puthenpurackal | 27 |

# மறைமாவட்டச் செய்திகள்

## ▶ SDS துறவற சபையின் பொன்விழா

SDS துறவறச்சபையின் பொன்விழா கொண்டாட்டம் 2023 நவம்பர் 4 அன்று மஞ்சாலுமூடு குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. பாளையங்கோட்டை ஆயர் மேதகு அந்தோணிசாமி சவரிமுத்து அவர்கள் மறையுரை வழங்கினார். தொடர்ந்து பொதுக்கூட்டமும் கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. தக்கலை மற்றும் பிற மறைமாவட்டங்களைச் சார்ந்த அருட்தந்தையர்கள் மற்றும் இறைமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ▶ மறைமாவட்ட தினம்

தக்கலை மறைமாவட்ட 27-வது மறைமாவட்ட தினக் கொண்டாட்டம் 2023 நவம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூடு, திரு இருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. மதியம் 2.30 மணியளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து பொதுகூட்ட நிகழ்வுகள் நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் ஒருவருட அறிக்கையை காணொலி காட்சியாக சமர்பித்தார். அனைத்து இயக்கங்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றது. அருட்தந்தை சனல் தலைமையிலான குழுவினார் நிகழ்வுகளை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்.

## ▶ மறைபரப்புபணியாளர் சந்திப்பு – மதுரை

தக்கலை மறைமாவட்ட விரிவாக்கப்பட்ட மாவட்டங்களில் பணியாற்றும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் சந்திப்பு 2023 நவம்பர் 14 அன்று காலை 10 மணியளவில் மதுரை, அரியூரில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருப்பலிக்கு தலைமை தாங்கினார். தொடர்ந்து மறைபரப்புகளின் சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் தங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

## ▶ நினைவுத்திருப்பலி – மாறப்பாடி

தக்கலை மறைமாவட்ட முன்னோடி அருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குன்னேல், SH அருட்கன்னியர்கள் அருட்சகோதரி ஆன் மரியா SH, அருட்சகோதரி ஆனி ஜேம்சன் SH மற்றும் அருட்சகோதரி

யூஜின் மரியா SH ஆகியோரின் நினைவுத்திருப்பலி 2023 நவம்பர் 15 அன்று மாறப்பாடி புனித தோமையார் ஆலய வளாகத்தில் மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருப்பலிக்கு தலைமை தாங்கினார். இரவு உணவுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றது. அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

### FCC துறவற சபையின் பொன்விழா

FCC துறவற சபை தக்கலை மறைமாவட்டத்தில் பணியாற்றியதன் பொன்விழா கொண்டாட்டம் 2023 நவம்பர் 18 அன்று அழகியமண்டபம், மகாண இல்லத்தில் நடைபெற்றது. காலை 10.00 மணியளவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. CMI மகாணத்தலைவர் அருட்தந்தை மேத்யூ ஆரக்குளம் CMI அவர்கள் மறையுரை வழங்கினார். தொடர்ந்து பொதுக்கூட்டமும் கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. அருடசகோதரி மதர் லிற்றி FCC தலைமை தாங்கினார். தக்கலை மற்றும் பிற மறைமாவட்டங்களைச் சார்ந்த அருட்தந்தையர்கள் மற்றும் இறைமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வழிகாட்டுதல் குழுவின் முதல் கூட்டம் – மூலமற்றம்

மூலமற்றம் சினேகவில்லா இல்லத்தின் வழிகாட்டுதல் குழுவின் முதல் கூட்டம் 2023 நவம்பர் 23 அன்று நடைபெற்றது. திருமதி மெர்சி ஜோஸ், அருட்தந்தை ஜினோய் தொட்டியில் மற்றும் கூரியா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### அருட்தந்தையர் பேரவை

அருட்தந்தையர் பேரவையின் ஏழாவது கூட்டம் தக்கலை சங்கமத்தில் 2023 நவம்பர் 28 அன்று காலை 10.15 மணியளவில் நடைபெற்றது. பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் நிகழ்வுகள் குறித்து விளக்கி கூறினார். தொடர்ந்து விவாதங்களும் மதிப்பீடுகளும் நடைபெற்றன.

### கருணை இல்லம் – வெள்ளிவிழா

கல்லுவிளை, கருணை இல்ல வெள்ளிவிழா 2023 நவம்பர் 29 மாலை 4.00 மணியளவில் நடைபெற்றது. CMC தக்கலை மகாணத்தலைவி அருட்சகோதரி வினயா CMC தலைமை தாங்கினார். மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்வுகள் நடைபெற்றது.

# தென்காசி மறைத்தள செய்திகள்

**மறைபரப்பு பணியாளர் கூட்டம்**

தென்காசி மறைத்தளத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம் 2023 நவம்பர் 13, மாலை 4:30 மணியளவில் பார்டரில் வைத்து நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். தென்காசி மறைத்தளத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி அவர்கள் அனைவரையும் வரவேற்று, திருப்பலி புத்தகத்தில் மார் தியதோரின் முறை மற்றும் மார் நெஸ்தோரியன் வழிபாட்டு முறைகளை பற்றியும் அதன் விளக்கங்களை குறித்தும் தெளிவாக வகுப்புகள் நடத்தினார். தொடர்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் பக்த இயக்கங்களின் செயல்பாடுகளைக் குறித்து கலந்துரையாடப்பட்டது. பொன்விழா கொண்டாடுகின்ற அருட்சகோதரி அல்போ கிரேஸ் FCC அவர்களுக்கு வாழ்த்துக்கள் கூறி நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் மறைத்தள வளர்ச்சிகளை எடுத்து கூறி பாராட்டுகளை தெரிவித்தார். அதன் பின்பு மாலை வேளை ஜெபம் (ரம்ஸா) நடைபெற்றது. அதனோடு இணைந்து ஒப்புரவு அருளடையாளமும் வழங்கப்பட்டது. இறுதி ஆசீருக்கு பின் அன்பின் விருந்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

சுந்தர பாண்டிய புரம் - மறைத்தளம் ஆலயகட்டுமான பணிக்கான கட்டளை மந்திரிப்பு 2023 நவம்பர் மாதம் 13-ஆம் தேதி நடைபெற்றது.



***அருட்சகோதரி. லிபியா CMC***

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

**புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவன் திட்டை**

கழுவன்திட்டை, புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயத்தின் குடும்ப விழாவானது *2023* அக்டோபர் மாதம் *29*ஆம் நாள் முதல் நவம்பர் மாதம் ஐந்தாம் நாள் வரை சிறப்பாக நடைபெற்றது. அக்டோபர் *29*ஆம் நாள் மாலை *6:30* மணிக்கு பங்குத் தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் திருகொடியேற்றினார். தினமும் மாலை *6* மணிக்கு ஜெபமாலை, நவநாள், ஆடம்பர திருப்பலி மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது. அக்டோபர் *30* முதல் நவம்பர் *1* வரை நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. ஐந்தாம் நாள் மாலை *6:00* மணிக்கு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி மற்றும் முதல் திருவிருந்து நடைபெற்றது. ஆறாம் நாள் திருப்பலியை தொடர்ந்து திருப்பவனி நடைபெற்றது. ஏழாம் நாள் காலை *10* மணிக்கு ஜெபமாலையும் அதை தொடர்ந்து இராசை திருப்பலி, கொடி இறக்குதல், அன்பின் விருந்து ஆகியவை நடைபெற்றது. அன்று மாலை *6:00* மணிக்கு மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றது.

## களியல்

**புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்**

*19.12.2023* அன்று மறைக்கல்வி மாணவர்களின் செயல்திட்டத்திற்காக, காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தை பார்வையிட்டனர். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றது.



### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலய மறைக்கல்வி நிலையம் சார்பாக மாணவர்களுக்கான கண்காட்சி 2023 நவம்பர் 19 அன்று திருப்பலிக்கு பின் நடைபெற்றது. மாணவர்கள் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தும் விதம் சிறப்பாக செய்திருந்தனர்.

## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

23.11.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று தக்கலை மறை மாவட்ட அளவில் நடைபெற்ற மிஷன்லீக் இயக்க பேரணியில் சூசைபுரம் மிஷன் லீக் இயக்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பல்வேறு புனிதர்களின் வேடமணிந்து உற்சாகத்தோடு இந்த பேரணியில் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஜெபமாலை மாதமாகிய அக்டோபர் மாதத்தில் மரியாயின் சேனையினர் ஒவ்வொரு நாளும் வெளியிட்ட குறுந்தகவல்களை அடிப்படையாகக் கொண்ட வினாடி வினா போட்டியானது மறைக்கல்வி மாணவர்களுக்கு 23.11.2023 அன்று காலை நடத்தப்பட்டது. மாணவர்கள் உற்சாகத்தோடு இதில் கலந்துகொண்டர்.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

2023 நவம்பர் 5 ஆம் தேதி இளையோர் இயக்கம் சார்பில் உணவு திருவிழா நடைபெற்றது. தொடர்ந்து திருவிழாவிற்கு ஆயத்தமாக பாடல், பேச்சு, குழுப்பாடல் போன்ற போட்டிகள் நடைபெற்றன. மாலையில் இரண்டாம் ஜாண்பால் குறித்த வினாடி வினாப் போட்டியும் நடைபெற்றது. 13 ஆம் தேதி உறவிய அடிப்படையிலான பாட்டு போட்டியும் விவிலிய வசனம் எழுதுதல் போட்டியும் நடைபெற்றது. திருவிழாவிற்கு ஆயத்தமாக நவம்பர் 14 ஆம் தேதி நற்கருணை ஆராதனையும் பாவ சங்கீர்த்தனமும் நடைபெற்றது.

#### குடும்ப விழா

நவம்பர் 17 முதல் 26 வரை ஆலய திருவிழாவானது சிறப்புற நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் கொடியேற்றமும் தினமும் மாலையில் ஜெபமாலை, நவநாள் மற்றும் திருப்பலியும் நடைபெற்றது. நவம்பர் 19 அன்று மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்து 14 குழந்தைகளுக்கு முதல் திருவிருந்தும் வழங்கினார். தொடர்ந்து மூன்று நாள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. 23 ஆம் தேதி உறவியங்களின் ஆண்டு விழாவும் 24 ஆம் தேதி பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றது. 26 ஆம் தேதி அருட்தந்தை ஜஸ்டின்

செருவேலில் தலைமையில் இராசை திருப்பலி நடைபெற்றது. மதியம் அன்பின் விருந்தும் நடைபெற்றது. மாலையில் இளையோர் இயக்க ஆண்டு விழாவும் 27 ஆம் தேதி மாலையில் உயிர் நீத்தோர் நினைவு திருப்பலியும் நடைபெற்றது. 26 ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு கொடி இறக்கதோடு திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

- **பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்.**

*19.11.23* அன்று அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய நாள் திருப்பலிக்கு பின் அருட்சகோதரி எல்சிட் SABS அவர்களின் பெயர் கொண்ட திருவிழா கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஒருநாள் சுற்றுலா *2023* நவம்பர் *01* அன்று பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.

*2023* நவம்பர் *14,15,16* ஆகிய தேதிகளில் நோயாளிகளை சந்தித்து ஜெபித்து நற்கருணை வழங்கப்பட்டது.

*19.11.2023* அன்று பிற்பகல் *2.00* மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றது.

*26.11.2023* அன்று மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் அருட்தந்தை டோஜி தலைமையில் நடைபெற்றது.

- **தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

*12.11.2023* அன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குப் பின்னர், அருட்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் பங்கு பேரவைக்கூட்டம் நடைபெற்றது.

*26.11.2023* அன்று நடைபெற்ற மிஷன்லீக் றாலியில் ஆசிரியர்களும், மாணவர்களும் பங்கெடுத்தனர்.

எல்லா வெள்ளிக்கிழமையும் சிறப்பு நற்கருணை ஆராதனையும், நற்கருணைப்பவனியும் நடைபெற்று வருகிறது.

*18.11.2023* சனிக்கிழமை மாலை *6* மணிக்கு பங்குத்தந்தை Fr.சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களின் கூட்டம் நடைபெற்றது.

## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை**

*2023* நவம்பர் *07* அன்று, முதல் வியாழக்கிழமை, காலை *6* மணி முதல் மாலை *6* மணி வரை *12* மணி நேர தொடர் ஜெபமாலை நடைபெற்றது.

ஒவ்வொரு உறவியமாக ஜெபமாலை வழிபாட்டை இறை மக்கள் சிறப்பித்தனர். ஜெபமாலை வழிபாட்டின் முடிவில் திருப்பலி, தொடர்ந்து குணமளிக்கும் நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணை பவனி நடைபெற்றது. இறுதியாக அனைவருக்கும் நேர்ச்சை விருந்து பரிமாறப்பட்டது.

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்**

கிறிஸ்து அரசர் ஆலய திருவிழா நவம்பர் 12 முதல் 17 முடிய பாப்புலர் மிஷன் தியானம் நடைபெற்றது. தியானத்தை வின்செந்திய அருட்தந்தை ஆண்டனி ராஜு மற்றும் அருட்தந்தை சேவியர் ஆகியோர் முன்னின்று வழிநடத்தினர்.

அதனைத் தொடர்ந்து 2023 நவம்பர் 20 முதல் 26 முடிய ஆலய திருவிழாவும் கொண்டாடப்பட்டது. திருவிழாவின் முதல் நாளான நவம்பர் 20 அன்று, மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருவிழா கொடியேற்றம் மற்றும் திருப்பலி நடைபெற்றது. ஏழாம் நாள் ஆடம்பர ராசா திருப்பலி பேரருட்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவின் எல்லா நாள்களிலும் ஜெபமாலை மற்றும் நவநாள் ஜெபமும் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

---

## இதர செய்திகள்

- SJSM மகாணத்தலைவி அருட்சகோதரி லில்லி பயப்பிள்ளி SJSM 2023 நவம்பர் 01 அன்று மறைமாவட்ட ஆயரை தக்கலை ஆயர் இல்லத்தில் சந்தித்தார்.
- திருத்தொண்டர்கள் அமன்றோ, லின்றோ, சான்ஜோ ஆகியோர் தங்களது படிப்பை நிறைவு செய்து மறைமாவட்ட பங்குளில் இறைபணி செய்து வருகின்றனர்.
- புனித அல்போன்சா பள்ளி வளாகத்தில் மழலைகள் பிரிவு கட்டிடம் 2023 நவம்பர் 17 அன்று மந்திரிக்கப்பட்டது.
- அருட்தந்தை டோபின் ஆலப்புரக்கல் விரிவாக்கப்பட்ட மறைபரப்புதளங்களின் ஒருங்கிணைப்பாளராக 2023 நவம்பர் 14 முதல் செயல்படுவார்.

| MONTHLY AGENDA – DECEMBER 2023 | | | |
|---|---|---|---|
| **DATE** | **DAY** | **TIME** | **EVENTS** |
| 1 | Fri | 9.00 pm | SINAI : Eparchial Bible Convention @ Kalluvilai |
| 2 | Sat | 10.00 am | SINAI : Eparchial Bible Convention @ Kalluvilai<br>CML : Christen retreat @ Kalluvilai |
| 3 | Sun | 9.00 am<br>9.30 am<br>02.00 pm | SINAI : Eparchial Bible Convention @ Kalluvilai<br>CML : Christen retreat @ Kalluvilai<br>PULARI : SHG Leaders Meet @ Pudur |
| 7 | Thu | 10.00 am | Pastoral Council special team Meeting @ Bishop's House |
| 8 | Fri | 9.30 am | FA : Marriage Preparation Course @ Kalluvilai |
| 9 | Sat | 9.30 am<br>11.00 am<br>02.00 pm | FA : Marriage Preparation Course @ Kalluvilai<br>CAT : Forane Secretaries Meet<br>CAT/ CML/ KII Christmas gathering @ Sangamam |
| 10 | Sun | 1.30 pm<br>2.00 pm<br>2.00 pm | SMYM : Christmas Celebration @ Soosaipuram<br>CAT : Basic Training for Sunday School Teachers @ Manjalumoodu<br>CAT : Bible fest competitions @ Pudur |
| 12 | Tue | 10.00 am<br>07.00 pm | Christmas Gathering with the Heads of the Institutions @ Sangamam<br>Christmas Gathering with Sychar resource Centre Staffs @ Bishop's House |
| 16 | Sat | 10.00 am<br>4.30 pm | CRI Christmas Celebration @ Kattathurai<br>Christmas meet at Tenkasi Mission @ Pudur |
| 17 | Sun | 9.30 am<br>5.00 pm | Christmas meet at Madhurai Mission<br>Christmas meet at Cumbum Mission @ Angoorpalayam |
| 18 | Mon | 11.00 am<br>6.00 pm | Christmas Gathering with the Charitable institution Heads @ Bishop's House<br>Christmas meeting with well wishers @ Bishop's House |

| | | | |
|---|---|---|---|
| 19 | Tue | 5.00 pm | Priests Conference & Pre-Christmas Gathering |
| 20 | Wed | 5.00 pm | Matrujyotis Christmas Celebration @ Kattathurai |
| 22 | Fri | 11.00 am<br>6.00 pm | Christmas meeting and Lunch with Major Seminarians @ Sangamam<br>Christmas meeting with Minor Seminarians & Seeds at Mukoottukal |
| 23 | Sat | 9.00 am<br>6.00 pm | SINAI : One Day Convention @ Sinai Retreat Center<br>Christmas meeting the Neighbourhood @ Bishop's House |
| 25 | Mon | 5.00 pm | Biblical Magic Show @ Kaliyal |
| 27 | Wed | 9.00 am<br>9.00 am | CAT : Forane Level Bible Fest – Arukani Forane @ Arukani<br>CAT : Forane Level Bible Fest – Manjalumoodu Forane @ Mukootukal |
| 28 | Thu | 9.00 am<br>9.00 am | CAT : Forane Level Bible Fest – Soosaipuram Forane @ Soosaipuram<br>CAT : Forane Level Bible Fest – Thu - Plankalai Forane @ Kattathurai |
| 29 | Fri | 9.00 am<br>9.00 am | CAT : Forane Level Bible Fest – Padanthal Forane @ Padanthalumoodu<br>CAT : Forane Level Bible Fest – Nithiravilai Forane @ Christurajapuram |
| 30 | Sat | 9.00 am | CAT : Forane Level Bible Fest – Kaliyal Forane @ Kulasekaram |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

## BISHOP'S ENGAGEMENTS – DECEMBER 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 9.00 am<br>5.00 pm | Kalluvilai : Eparchial Bible Convention<br>Soosaipuram : APJM School Annual Day |
| 2 | Sat | 9.00 am<br>4.00 pm | Kalluvilai : Eparchial Bible Convention<br>Padanthalummoodu : SH School Annual Day |
| 3 | Sun | 9.00 am<br>2.30 pm | Kalluvilai : Eparchial Bible Convention<br>Thiruvithamcodu: Arapalli Jubilee Meeting |
| 4 | Mon | 5.30 pm | Cristurajapuram : School Annual Day |
| 5 | Tue | 5.30 pm | Mankarai : School Annual Day |
| 6 | Wed | 09.30 am | Bishop's House: Curia meeting |
| 7 | Thu | 10.00 am<br>5.00 pm | Bishop's House : V Star Executive Meeting<br>Bishop's House : Pastoral Council special team Meeting |
| 8 | Fri | 10.30 am | Changanacherry: Visit to Dn. Liju's Home |
| 9 | Sat | 10.00 am<br>10.30 am<br>2.00 pm | Mulagumoodu : Nanjil Milk Anniversary<br>Marthandam : UCC Christmas @ Marthandam<br>Sangamam : CAT/ CML/ KII Christmas gathering >> Chennai |
| 10 | Sun | 04.00 pm | >> Chennai : Christmas Gathering with Thuckalay Migrants |
| 11 | Mon | 12.00 pm | Kadalur : Health Care Seminar |
| 12 | Tue | 10.00 am<br>07.00 pm | Sangamam : Christmas Gathering with the Heads of the Institutions<br>Kozhipporvilai : Christmas Gathering with Sychar resource Centre Staffs |
| 13 | Wed | 6.00 pm | Bishop's House : Christmas Gathering with *IraiArul* Staffs |
| 14 | Thu | 4.00 pm | Ramanputhur : Marriage Blessing |
| 15 | Fri | 9.30 am | Bishop's House: Curia meeting |

| | | | |
|---|---|---|---|
| 16 | Sat | 10.00 am<br>4.30 pm | Kattathurai : CRI Christmas Gathering<br>Pudur : Christmas meet @ Tenkasi Mission |
| 17 | Sun | 9.30 am<br>4.30 pm | Madhurai : Christmas meet @ Madhurai Mission >> Cumbum<br>Cumbum: Christmas meet @ Angoorpalayam |
| 18 | Mon | 11.00 am<br>6.00 pm | Bishop's House : Christmas Gathering with the Charitable institution Heads<br>Sangamam : Christmas meeting with well wishers |
| 19 | Tue | 5.00 pm | Sangamam : Priests Conference & Pre-Christmas Gathering |
| 20 | Wed | 5.00 pm | Kattathurai : Matrujyotis Christmas Celebration |
| 21 | Thu | 11.00 am | Arumanai : Christmas Gathering |
| 22 | Fri | 11.00am<br>6.00 pm<br>8.00 pm | Sangamam : Christmas meeting and Lunch with Major Seminarians<br>Mukoottukal : Christmas meeting with Minor Seminarians & Seeds<br>Srayinkuzhi : Christmas Celebration |
| 23 | Sat | 6.00 pm<br>8.00 pm | Bishop's House : Christmas meeting the Neighbourhood<br>Bishop's House : Community Christmas Gathering |
| 24 | Sun | 10.30 pm | Karode : Christmas Holy Qurbana |
| 25 | Mon | 5.00 am | Kaliyal: Biblical Magic Show |
| 26 | Tue | 11.00 am | Mannanam : Feast day Holy Qurbana |
| 27 | Wed | 9.30 am | Kudamaloor: Jubilee of Fr.Mani Puthiyidam |
| 28 | Thu | 9.30 am | Bishop's House : Curia Meeting |
| 29 | Fri | 5.30 pm | Appattuvilai : Kurisady Blessing |
| 30 | Sat | | Prayer day |
| 31 | Sun | 10.00 am | Vattakottai : Holy Qurbana |

**Dn. Liju Marattukalam, Bishop's Secretary**



Popular Mission Retreat 2023 Nov 12 - 17 at Christurajapuram



Remembrance Holy Qurbana - 15.11.2023 at Marappady



Golden Jubilee of FCC Congregation - 18.11.2023 at Azhakiyamandapam




Presbyteral Council 28.11.2023 at Sangamam



Priests' Conference 21 November 2023 at Sangamam



Karunalayam Silver Jubilee 29 November 2023 at Kalluvilai

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570